தமிழகச் சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1967 மார்ச் 20.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

நீத்தார் நினைவுக் குறிப்பு.

திரு. சண்முக இராஜேஸ்வர சேதுபதி—முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இன்றைய அலுவல் தொடக்கத்தில் நீத்தார் நினைவுக் குறிப்பு ஒன்றுள்ளது. 1946-ம் ஆண்டு முதல் 1952 வரை தென் நிலச்சுவாந்தார் தொகுதியிலிருந்தும் 1952 முதல் 1967 வரை இராமநாதபுரம் தொகுதியிலிருந்தும் இந்த அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராகவும் 1952 முதல் 1957 வரை இம்மாநில அமைச்சராகவும் விளங்கிய திரு. சண்முக இராஜேஸ்வர சேதுபதி அவர்கள் இம்மாதம் 4-ம் தேதி அன்று காலமான செய்தியை இந்த அவைக்கு மிக்க வருத்தத்துடன் அறிவிக்கின்றேன். இந்த அவையின் சார்பாக நம் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்திற்கு நான் தெரிவிக்கிறேன். மறைந்த திரு. சண்முக இராஜேஸ்வர சேதுபதி அவர்களுக்கு நாம் மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவை உறுப்பினர்கள் ஒரு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல், கேள்வி நேரம். மதிப்பிற்குரிய அமைச்சர் விடை அளிப்பதற்கு கேள்விகள் இல்லை. ஆகவே, அடுத்த அலுவல், 41-வது சட்டப் பேரவை விதிக்கிணங்க ஓர் அவசர முக்கிய காரியத்தை மதிப்பிற்குரிய திரு. எம். சி. பாலன் அவர்கள் மதிப்புக்குரிய விவசாய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் அவருடைய இருப்பிடத்தில் இல்லாத காரணத்தினால் நம் பேரவை விதிகளின்படி அவர் கொடுத்துள்ள இந்த அறிவிப்பு திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும். It will be deemed to have been with drawn. அடுத்த அலுவல், அரசினர் தீர்மானங்கள்.